# கலாதீபம்
කලාදීපම් KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.08.2025 | தீபம் 38


# கலாசாலையில் கல்விக் கண்காட்சி

## புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி அதிபர் சின்னத்தம்பி திரிகரன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிலும் கணித விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கற்பித்தல் உபகரண கண்காட்சி 23.7.2025 புதன்கிழமை காலை 9:30 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற்றது

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி அதிபர் சின்னத்தம்பி திரிகரன் கலந்து கொண்டார்.

தேசியக்கொடி கலாசாலைக்கொடி என்பன ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து மங்கல விளக்கு ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாயின.

கற்பித்தலில் கண்காட்சியின் அவசியம் என்ற பொருளில் விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவர் இ. செந்தூர்ச்செல்வன் உரையாற்றினார். பிரதி அதிபர் க.செந்தில்குமரன் அதிதி அறிமுகவுரையை ஆற்றினார்.

விஞ்ஞானநெறி ஆசிரியமாணவி தேவராசா கீற்றா நிகழ்வுகளை முன்னிலைப்படுத்தினார், திருக்குமார் அஞ்சலோஸ் பெலினி நன்றியுரை ஆற்றினார்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அதிபர் சி. திரிகரன் கலாசாலை முகாமைத்துவ குழுவினரால் கௌரவிக்கப்பட்டார்.

கண்காட்சியை ஆசிரிய மாணவர்களுடன் அயற் பாடசாலைகளின் மாணவர்களும் பார்த்துப் பயன்பெற்றனர்







**01.07.2025 — 31.07.2025 காலப்பகுதிக்கான நிகழ்வுகளின் தொகுப்பு**

## கலாதீபக் குழுமம்


**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**வளவாளர்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

திரு இ.செந்தூர்ச்செல்வன்
ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

செல்வி தி.பெலினி
ஆசிரிய மாணவி விஞ்ஞானநெறி (2023/2024)

**பட ஒருங்கிணைப்பு**

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

திரு மு.கஜேந்திரன்
ஆசிரியமாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)


கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.


**வெளியீடு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com


## கலாசாலையில் ஆடி அமாவாசையை சிறப்பிக்கும் புதன் ஒன்று கூடல்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெற்று வரும் புதன் ஒன்று கூடல் நிகழ்வு 22.07.2025 புதன் காலை ஆடி அமாவாசையை சிறப்பிக்கும் நிகழ்வாக இடம் பெற்றது

இதன் போது ஆடி அமாவாசை குறித்த ஆங்கில விவரண காணொளியை விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவி திருக்குமார் அஞ்சலோஸ் பெலினி தயா ரித்து காட்சிப்படுத்தினார்

விரிவுரையாளர் கு.பாலஷண்முகன் ஆடி அமா வாசை விரதம் குறித்த சிறப்புரையை ஆற்றினார்.



An introduction to AADI AMAVASAI ஆடி அமாவாசை விரதம் (a fasting for our ancestors)

This was prepared by Mrs S. Belini (teacher student - Science ) Kopay Teachers' College as her presentation for the assembly.

Ms S. Belini came for her teacher training from Vaddukoddai Jaffna college

She used AI to give voice over in English style.



# கலாதீபம்

Kaladeepam

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

### புதிய கல்விச் சீர்திருத்தத்தின் பொருத்தப்பாடு

புதிய கல்விச் சீர்திருத்தமானது, இன்றைய சமுதாயத்தின் தேவைகளுக்கு ஏற்ப கல்வி முறையை மேம்படுத்துவதையும், மாணவர்களுக்குத் தேவையான அறிவையும் திறன்களையும் வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

கல்விச் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்களாக

பாடத்திட்ட சீர்திருத்தம்

கற்பித்தல் முறை மேம்பாடு

தொழில்சார் கல்வி

தொழில்நுட்பத்தின் பயன்பாடு

தேர்வுமுறை சீர்திருத்தம்

கல்வி நிர்வாக சீர்திருத்தம் போன்ற அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

புதிய கல்விச் சீர்திருத்தம், நடைமுறைக்கு கொண்டுவருவதில் சில சவால்கள் உள்ளன.

ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பது, பாடத் திட்டங்களை உருவாக்குவது, தேர்வு முறைகளை மாற்றுவது போன்றவை சவாலானவை.

இருப்பினும் இப்புதிய கல்விச் சீர்திருத்தம், மாணவர்களின் எதிர்காலத்திற்கு மிகவும் அவசியமானது. இது மாணவர்களுக்கு அறிவாற்றல், திறன் மற்றும் ஆளுமை ஆகியவற்றைப் பெறுவதற்கான வாய்ப்புகளை வழங்கும். அதே நேரத்தில், சீர்திருத்தத்தின் வெற்றி, நடைமுறைப் படுத்துவதில் உள்ள சவால்களை எவ்வாறு எதிர்கொள்கிறோம் என்பதைப் பொறுத்தது.


# தரவட்டம்

2026 ஆம் ஆண்டில் புதிய கல்விச் சீர்திருத்தம் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.

இது பற்றிய கருத்துரை ஒன்றை தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 13.07.2025 ஞாயிறு ஆங்கிலத்தில் ஆற்றியிருந்தார்

அதனை ஒட்டிய உரை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளர்களுக்கான தரவட்ட நிகழ்வில் போது வே.சேந்தன்(SLTES) அவர்களால் தமிழில் ஆற்றப்பட்டது.

இது நமது ஏனைய ஆசிரியர்களுக்கும் பயன் தரும் என்பதால் அதன் வீடியோவை (with PPT slides) உடன் எமது youtube பக்கத்திலும் காட்சிப் படுத்தியிருக்கிறோம்.






# News in Brief - Month of July

**03.07.2025**
**Assembly**
The Assembly organized by the Special Education Course Teacher Students of College was held under the chairmanship of the Principal of the College, S.Laleesan.
Dr. Subhaschandran Kumaran, Head of the Department of Community and Family Medicine, University of Jaffna, participated as the guest speaker at the event.
The event was presided over by teacher student Sampathkumar Dharmini. Special Education teacher student Sajakhan Fatima Nusla spoke on the topic of current trends in special education. This speech was simultaneously translated into sign language by teacher student Thangarasa Tharshan.
86 newly appointed Sri Lanka Teacher Educator Service Tamil Medium Officers participated in the event as college assembly observers. One of them gave a reflection.

**09.07.2025**
**Assembly**
The Assembly jointly organized by the English Course and the Commerce Course was held under the chairmanship of the College Principal, S. Laleesan.
The guest speaker was Rev. Arutpani. Sebamalai Anburaja Adikalar, Director of the Mangulam A.M.D.I. Karangal Organization.
Ms.Nirojan Kaushiga, highlighted the events. Subramaniam Selvakumari, a teacher student of English, delivered a speech on the topic of writers who have given their lives to the college.

**09.07.2025**
**Welcoming Ceremony for Newly Appointed Lecturers at Kopay Teachers' College.**
During this, Rajenthiram Nimal (Tamil), Jayakularajah Collins (Special Education), Thananjayarajan Uthayarajan (Special Education), and Yasothai Turairajasingham (English) were felicitated and welcomed by the Lecturers' Guild.

**16.07.2025**
**Aadi - Pirappu festival organized by the College Kavin kalai Mandram**
The event was held under the chairmanship of the Principal of the College, S. Laleesan.
Kalabhushanam Padmini Selvendrakumar, director of the Kalaikovil Dance School, was the chief guest of the event.
Jeevanandam Sajeevan, editor of Thennadu newspaper, was the guest speaker.
At the conclusion of the event, traditional Aadi - pirappu kuul, kozhukattai were served.

**18.07.2025**
**The new education reform** is to be implemented in schools in 2026. A presentation regarding was made in English by the Director General of the NIE at the University of Jaffna on Sunday, 13.07.2025.
The accompanying speech was delivered in Tamil by Mr. V. Senthan SLTES during the quality circule session at College.

**23.07.2025**
**Educational exhibition at the College**
The teaching learning aids exhibition organized by the Mathematic & Science Course teacher students at the College.
The event, which was chaired by the Principal of the College, S.Laleesan, the event was graced by the presence of the Principal of Puttur Sri Somaskandha College, Sinnaththamby Thrikaran as Chief Guest.

**30.07.2025**
The **Retirement** of Non-Acadmic staff Mr. Sandhya Thevarasa retirement function was specially organized by the college community.

**31.07.2025**
Kopay Teachers' college **athletics competition** was held on Thursday, 3 pm at the college ground.
The chief guest Former lecturer of Physical Education K. Anparasi,
The events hold under the leadership of the college Principal, S. Laleesan, and organized by the lecturer of Physical Education, B. Bhaskaran.

# புதன் வாராந்த ஒன்றுகூடல்
# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமுதாய மற்றும் குடும்பநல மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் சுபாஸ்சந்திரன் குமரன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விசேட கல்வி ஆசிரிய மாணவர்கள் முன்னெடுத்த ஒன்றுகூடல் நிகழ்வு 03.07.2025 வியாழக்கிழமை காலை ரதி லக்ஷ்மி மண்டபத்தில் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் அதிதி பேச்சாளராக யாழ்ப்பாண பல்கலைக்கழக சமுதாய மற்றும் குடும்ப நல மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர். சுபாஸ் சந்திரன் குமரன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் வாழ்த்துரையை வடக்கு மாகாண கல்வித்திணைக்கள பிரதிக்கல்விப் பணிப்பாளர் லதாங்கி அம்பிகைபாகன் ஆற்றினார்.

நிகழ்வை ஆசிரிய மாணவி சம்பத்குமார் தர்மினி முன்னிலைப்படுத்தினார். விசேட கல்விநெறி ஆசிரிய மாணவி சாஜகான் பாத்திமா நுஸ்லா விசேட கல்வியின் தற்போதைய செந்நெறிகள் என்ற பொருளில் உரையாற்றினார். இவ்வுரை சமநேரத்தில் ஆசிரிய மாணவர் தங்கராசா தர்ஷனால் (sign) சைகைப் பரிபாஷையில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது.

இன்றைய நிகழ்வில் புதிதாக நியமனம் பெற்ற இலங்கை ஆசிரியர் கல்வியாளர் சேவை தமிழ் மொழிமூல உத்தியோகத்தர் 86 பேர் கலாசாலை ஒன்றுகூடல் அவதானிப்பாளராக கலந்து கொண்டனர். அவர்களுள் ஒருவர் பிரதிபலிப்பு வழங்கினார்.

வாழ்த்துரை வழங்கிய பிரதிக்கல்விப் பணிப்பாளர் லதாங்கி அம்பிகைவாகன், டாக்டர்.சுபாஸ்சந்திரன் குமரன் ஆகியோர் கலாசாலை முகாமைத்துவ குழுவினரால் கௌரவிககப்பட்டனர்.









# புதன் வாராந்த ஒன்றுகூடல் மாங்குளம் அ.ம.தி கரங்கள் அமைப்பின் இயக்குனர் அருட்பணி செபமாலை அன்புராசா அடிகளார் அவர்கள் கலந்து சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஆங்கில நெறி, வணிக நெறி இணைந்து முன்னெடுத்த புதன் ஒன்றுகூடல் நிகழ்வு 09.07.2025 காலை 8.30 மணிக்கு கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெற்றது.

இதில் அதிதிப் பேச்சாளராக மாங்குளம் அ.ம.தி கரங்கள் அமைப்பின் இயக்குநர் அருட்பணி. செபமாலை அன்புராசா அடிகளார் கலந்து கொண்டார்.

ஆங்கில நெறி ஆசிரிய மாணவி திருமதி. நிரோஜன் கௌசிகா நிகழ்வுகளை முன்னிலைப் படுத்தினார். ஆசிரிய மாணவி சுப்பிரமணியம் செல்வகுமாரி கலாசாலை தந்த எழுத்தாளர் என்ற பொருளில் உரை நிகழ்த்தினார்.

நிகழ்வில் கலாசாலைக்கு புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர் கல்வியாளர் சேவை உத்தியோகத்தர்களுக்கான வரவேற்பு உபசார மும் இடம்பெற்றது. இவர்களுக்கான வரவேற்பு உபசார உரையை கலாசாலை பிரதி அதிபர் கணபதிப்பிள்ளை செந்தில் குமரன் ஆற்றினார். புதிதாக நியமனம் பெற்ற இராஜேந்திரம் நிமல் (தமிழ்), ஜெயக்குலரா ஜா கொலின்ஸ்ரன் (விசேட கல்வி), தனஞ்சயராஜன் உதயராஜன் (விசேட கல்வி), யசோதை துரைரா ஜசிங்கம் (ஆங்கிலம்) ஆகியோர் சம்பிரதாய பூர்வமாக மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர்.

இவர்களுக்கான கௌரவிப்பு உரையை விரிவுரையா ளர்கழகத் தலைவரும் பிரதி அதிபருமாகிய கணபதிப்பிள்ளை செந்தில்குமரன் ஆற்றினார். புதிய விரிவுரையாளர்களுக்கான தேநீர் விருந்துபசாரமும் இடம்பெற்றது.

அருட்பணி. அன்புராசா அடிகளார் எழுத்தாளனின் உலகம் என்ற பொருளில் உரை நிகழ்த்தினார். அதிதி உரையை ஆற்றிய அருட்பணி. அன்புராசா கலாசாலை முகாமைத்துவ குழுவினரால் கௌரவிக்கப்பட்டார்









# கவின்கலை மன்றம் முன்னெடுத்த ஆடிப்பிறப்பு விழா

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கவின்கலை மன்றம் முன்னெடுத்த ஆடிப்பிறப்பு விழா 16.07.2025 புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாசாலையின் பழைய மாணவியும் கலைக்கோவில் நாட்டிய பள்ளியின் இயக்குனருமாகிய கலாபூஷணம் பத்மினி செல்வேந்திரகுமார் கலந்து கொண்டார்.

அதிதி பேச்சாளராக தென்னாடு பத்திரிகையின் ஆசிரியர் ஜீவானந்தம் சஜீவன் கலந்து கொண்டார்.

கவின்கலை மன்றக் காப்பாளர் ரஜிதா சின்னதுரை வாழ்த்துரை வழங்கினார். விரிவுரையாளர் வேல் நந்தகுமார் அதிதி அறிமுக உரை ஆற்றினார்

இந்நிகழ்வுகளை 2ஆம் வருட ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி கவுசியா தினேஷ் முன்னிலைப்படுத்தினார். இந்நிகழ்வில் ஆசிரிய மாணவிகள் இணைந்து “ஆடிப்பிறப்பு” பாடலை பாடினர்.

முதலாம் வருட ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜன் ஆடிப்பிறப்பு பற்றிய காணொளியைத் தயாரித்து காட்சிப்படுத்தினார்.

அதிதிகள் இருவரும் கலாசாலை முகாமைத்துவ குழுவினரால் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வின் நிறைவில் ஆடிப்பிறப்பு பாரம் பரியமான கூழ் கொழுக்கட்டை என்பன பரிமாறப்பட்டன.









# கற்பித்தல் சாரா உத்தியோகத்தர் சந்தியா தேவராசாவின் மணிவிழா

சந்தியா தேவராசா 1984 ஆம் ஆண்டு தொடக்கம் அதிபர் ஆனந்தகுமாரசாமி அம்மையார் காலம் முதல் அமைய உத்தியோகத்தகராக கடமையாற்றி 1992 நிரந்தர நியமனம் பெற்று 2025 கலாசாலை யில் இருந்து ஓய்வு பெறுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 41 ஆண்டுகள் கற்பித்தல் சாரா உத்தியோகத்தராக பணியாற்றிய சந்தியா தேவராசா எதிர்வரும் 08.08.2025 அன்று பணி ஓய்வு காணவுள்ள நிலையில் அவருக்கான மணிவிழா கலாசாலையில் இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைலமையில் இடம்பெற்ற இந் நிகழ்வை கற்பித்தல் சாரா அலுவலர் க. சஜீவ் தொகுத்து வழங்கினார். வரவேற்புரையை முகாமைத்துவ உத்தியோகத்தர் திருமதி. நிஷாந்தி பிரதீபன் வழங்கினார்.

இந் நிகழ்வில் வாழ்த்துரைகளை முன்னாள் அதிபர் வீ. கருணைலிங்கம் , பிரதி அதிபர்களான க. செந்தில்குமரன், த. கோபாலக்கிருஸ்ணன், உப அதிபர் சத்யா ரஜ்ஜிற், விரிவுரையாளர்கள் கு. பாலசண்முகன், வேல் நந்தகுமார், க. சஜீவ், முன்னாள் தலைமை முகாமைத்துவ உத்தியோகத்தர் திருமதி. வதனி கேதாரநாதன், ஆசிரிய மாணவர் சார்பில் இ. செந்தூர்ச்செல்வன் ஆகியோர் வழங்கினர்.

கற்பித்தல் சாரா உத்தியோகத்தர்கள் சார்பில் திருமதி. மேகிலா வாழ்த்துப்பா வாசித்தார்.

மணிவிழா நாயகன் சந்தியா தேவராசா ஏற்புரை வழங்கினார். கலாசாலை விரிவுரையாளர்கள், கற்பித்தல் சாரா உத்தியோகத்தர்கள்,

ஆசிரிய மாணவர்கள், தனித்தனியே தமது கௌரவிப்புக்களை வழங்கினர்.

இறுதியாக நன்றியுரையினை செல்வநாயகம் கஜன் ஆற்றினார்.








# கலாசாலையில் சிறப்பாக இடம்பெற்ற மெய்வல்லுநர் போட்டி

கோப்பாய் ஆசிரியர; கலாசாலையில் இல்ல மெய்வல்லுநர் போட்டி 31.07.2025 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கலாசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையிலும் உடற்கல்வித்துறை விரிவுரையாளர் பா.பாஸ்கரனின் ஒழுங்கமைப்பிலும் இடம்பெற்ற இப்போட்டி நிகழ்வுகளில் கலாசாலையின் முன்னாள் உடற்கல்வித்துறை விரிவுரையாளர் க.அன்பரசி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

ஆரம்பக்கல்வி ஆசிரிய மாணவரகளை மையப்படுத்தி செயற்பட்டு மகிழ்வோம் என்ற தொனிப்பொருளிலும் இரண்டாம் நிலை கற்கைநெறி ஆசிரிய மாணவர்களை மையப்படுத்தி மெய்வல்லுனர் போட்டி நிகழ்வுகளை கொண்டதாகவும் போட்டிகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

27 ஆசிரிய மாணவர்களுடன் மிகவும் திறம்பட இப்போட்டி நிகழ்வுகளை ஒழுங்கமைத்த உடற்கல்வித்துறை விரிவுரையாளர் பா.பாஸ்கரனையும் இவ் ஒழுங்கமைப்பில் முழுமையாக அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட ஆசிரிய மாணவர்களையும் மற்றும் விரிவுரையாளர்களையும் அனைவரும் பாராட்டினர்.

காலாசாலையிலுள்ள ராதா, காவேரி, அருணா, சுவர்ணா ஆகிய இல்லங்கள் நான்கும் இணைக்கப்பட்டு ராதாகாவேரி என்று ஒரு இல்லமாகவும், அருணாசுவர்ணா என இன்னொரு இல்லமாகவும் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்பட்டன.

இதில் ராதாகாவேரி இல்லம் 190.5 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தினை தமதாக்கிக்கொண்டது

அருணாசுவர்ணா இல்லம் 187.5 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தினை தமதாக்கிக்கொண்டனர்.

கடந்த காலங்களில் அதிக மாணவர்களுடன் இடம்பெற்ற போட்டிகளுக்கு ஒப்பாக மிகக் குறைந்த ஆளணியினர் தமக்குரிய போட்டிகளை ஏற்பாடு செய்திருந்தனர் என்பது பலரையும் வியக்க வைத்திருந்தது.

போட்டிகளில் நடுவர்களாக வடக்கு மாகாண மட்டத்தில் தேர்ச்சி பெற்ற நடுவர்களாக விளங்குகின்ற - கலா சாலையின் உடற்கல்வித்துறையில் பயின்ற முன்னாள் ஆசிரிய மாணவர்கள் செயற்பட்டனர்

நிகழ்வுகளில் முன்னாள் அதிபர் வீ. கருணலிங்கம் முன்னாள் விரிவுரையாளர் ப. பௌசில்கனியா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்









# விசேட கல்வி ~ சமகால நோக்கு



**சாஜகான் பாத்திமா நுஸ்லா**
**விசேட கல்விநெறி ஆசிரிய மாணவி (2023/2024)**

விசேடகல்வி எனப்படுவது பொதுவாக மாணவர்களது இயலாமை, குறைபாடுகள் மட்டுப்பாடுகள் அல்லது அதி உன்னத ஆற்றல் அதீத நுண்ணீவு கொண்டவா்களுக்கு வழங்கப்படும் கல்வியை இது குறித்து நிற்கின்றது. விசேட கல்வி பற்றி இன்று எம் மத்தியில் ஒரு தெளிவான விளக்கம் காணப்படுவதில்லை. விசேட கல்வி தனியாக குறைபாடுடைய மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி என எம்மில் பலரும் நினைக்கின்றனர். ஆனால் அது தவறு. அது அவ்வாறல்ல. தனியே குறைபாடுடையவர்களுக்கு மட்டுமன்றி அதீத நுண்ணீவு கொண்ட மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வியும் விசேட கல்வியாகும்.

விசேட கல்விக்கான தேவை ஏன் எழுகிறது என்றால் ஒவ்வொரு மாணவரும் தனித்துவமானவர்கள் மற்றும் அவர்களின் கற்றல் தேவைகள் மாறுபடுகின்றன. சிலர் சாதாரண வகுப்பறையில் எளிதாகக் கற்கலாம். ஆனால் சிலருக்கு கூடுதல் கவனம் மற்றும் சிறப்புப் பயிற்சி தேவைப்படலாம் இவ்வாறான மாணவர்களுக்கு அவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தவும் அவர்களின் தனித்துவமான கற்றல் தேவைகளை பூர்த்தி செய்யவும் விசேட கல்வி தேவைப்படுகின்றது.

தற்காலத்தில் விசேட கல்வியில் பின்வரும் விடயங்கள் முக்கியம் பெற்று விளங்குகின்றன. உட்படுத்தல்கல்வி, தொழில்நுட்ப முன்னேற்றம் தனியாள்மயப்படுத்தப்பட்ட கற்றல், என்பவற்றைக் கூறலாம். சமகாலக்கல்வியில் பேசு பொருளாக இருக்கும் விடயம் தான் உட்படுத்தல்கல்வி எனும் எண்ணக்கரு. விசேட தேவையுடையவர்களை சாதாரண வகுப்பறையில் இணைத்து கற்பிப்பது உட்படுத்தல் அல்ல. மாறாக ஒரு வகுப்பில் இருக்கும் அனைத்து மாணவர்களையும் கற்றலின் பால் உள்ளீர்த்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபட வைப்பதே உட்படுத்தல் கல்வியாகும். இந்த உட்படுத்தல் கல்வியானது விசேட கல்வியின் அடுத்த கட்ட வளர்ச்சியல்ல. உட்படுத்தல்கல்வி என்பது விசேடகல்வியுடனும் தொடர்புபடும் ஒரு விடயம்தான் ஆனால் விசேட கல்வியின் வளர்ச்சி உட்படுத்தல் கல்வி இல்லை அத்தோடு ஒரு வகுப்பில் விசேட தேவையுடைய மாணவர்கள் இருப்பின் அவர்களுக்கு மாத்திரம் உட்படுத்தல் உரித்துடையது கிடையாது. மாறாக அந்த வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களையும் உள்வாங்கி அவர்களுக்கு தனித்துவமான கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்வது தான் உட்படுத்தல்கல்வியாகும்.

இதன் மூலம் அனைத்து மாணவர்களுக்கும் சம வாய்ப்புக்களை வழங்குதல், சமூகமயமாக்கல் போன்ற விடயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. இதில் சவாலான விடயம் என்னவென்றால் அண்மைக்கால ஆய்வுகளின் படி சாதாரண ஆசிரியர்களுக்கு உள்ளடங்கல் கல்வி தொடர்பான சரியான பயிற்சி குறைவாக உள்ளது. ஆகவே சகல ஆசிரியர்களுக்கும் உட்படுத்தல்கல்வி தொடர்பான பயிற்சி வழங்கப்படுவது அத்தியாவசியமாக காணப்படுகின்றது. விசேட கல்வித் தேவையுடைய பிள்ளைகளுக்கு அதற்கான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மாத்திரம் தான் கற்பிக்க வேண்டும் சாதாரண வகுப்பு ஆசிரியர்கள் கற்பிக்க முடியாது எனக் கருதுகின்றனர். அது தவறு. பொதுவாக அனைத்து ஆசிரியர்களுக்கும் விசேட கல்வி தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

அப்போது தான் சாதாரண வகுப்பறையில் உள்ள மாணவர்களுடன் விசேட தேவையுடைய மாண வரையும் இணைத்து அந்த ஆசிரியர்கள் ஒன்றாக கற்பிக்கக் கூடியதாக இருக்கும். இது தான் உட் படுத்தல் கல்வியை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்துவதற்கான மிக முக்கியமான விடயம்.

அடுத்தபடியாக எதிர்நோக்கும் சவால் உட்படுத்தல் கல்வியில் உள்ள விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு நம்பிக்கை ஊட்டுவது அவர்கள் சில சந்தர்ப்பங்களில் மனதளவில் பலவீனமடைகின்றனர். ஆகவே அவர்களுக்கு நம்பிக்கையூட்டுவதற்கு கூடிய அழுத்தம் கொடுத்தல் வேண்டும். மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை உருவாக்க வேண்டும். செயற்பாட்டுடன் கூடிய கற்றலுக்கு அதிக முன்னுரிமை வழங்குதல் வேண்டும். அதே வேளை இலங்கையில் உள்ள ஆரம்பக்கல்வியில் மட்டும் தான் பிள்ளைகள் விசேட கல்வி அலகுக-ளில் இருக்கலாம் அதற்கு மேற்பட்டோரை வைத்திருக்க முடியாது இது பற்றியும் ஆசிரியர்கள் அறிந்திருப்பது அவசியமாகும். உட்படுத்தல்கல்வி தொடர்பான சுற்றறிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதும் அவை எமது ஆசிரியர்களை சென்றடைவதில்லை வடமாகாணத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு அச் சுற்றறிக்கை அறிமுகப்படுத் தப்படவில்லை எனறே கூறலாம். இந்த விடயங்கள் தொடர்பாக ஆசிரியர்கள் தம்மை இற்றைப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

அடுத்தபடியாகப் பார்ப்போமானால் தொழினுட்ப வளர்ச்சி. இன்று உலகமானது AI தொழில்நுட்பம் நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. இது உலகளாவிய ரீதியில் பேசப்படும் ஒரு விடயமாகும். ஆனால் இந்த AI தொழினுட்பம் பற்றி எத்தனை ஆசிரியர்களுக்குத் தெரியும்? இவை விசேட தேவை மாணவர்களுக்கு இயலாமை உடையோரின் மட்டுப்பாடுகளை மட்டுப்படுத்தி இயலுமைகளை மேம்படுத்தி அவர்களுக்கே உரித்தான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் தனியார் மயப்படுத்தப்பட்ட கற்றல் பேறுகளை தொடர்ந்து செய்யக்கூடிய போதும் அத்தொழில்நுட்பங்கள் எமது வகுப்பறைகளுக்கும் எம்மாணவர்களுக்கும் வந்து சேரவில்லை. அது தொடர்பான பயிற்சியும் ஆசிரியர்களுக்கு இற்றைப்படுத்தப்பட வேண்டிய தேவையும் இன்று எம் மத்தியில் காணப் படுகின்றது.

அடுத்ததாக விசேட தேவை மாணவர்களுக்கான ஆரம்பத்தலையீடுகள், இதில் முக்கியமானது பெற்றோரின் ஒத்துழைப்பு. சுகாதார கல்வித்துறை இணைந்து இதில் செயற்பட வேண்டி இருக்கின்றது. சுகாதாரத்துறையானது காத்திரமான பங்களிப்பைச் செய்ய வேண்டும். பெற்றோர்களுக்கான மனத்தடைகளை அகற்ற வேண்டும். மாணவர்களை வீடுகளில் பயிற்றுவிப்பதற்காக அவர்களுக்கும் ஆரம்பத் தலையீடுகள் தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். அப்போது தான் பாடசாலையில் பயிற்றுவிக்கும் விடயங்களை அவர்கள் வீடுக-ளிலும் பயிற்றுவிக்கக் கூடியதாய் இருக்கும்.

விசேட கல்வி தொடர்பாக சமகாலத்தில் முக்கியம் பெறும் விடயங்களில் மற்றொன்று தனியாள் மயப்படுத்தப்பட்ட கற்றல் IEP/ILP. இதனைத் தய-ாரிக்கப் பெற்றோர், ஆசிரியர்கள், சுகாதாரத் துறை இவை மூன்றும் முக்கியமானவை. இவை மூ ன்றும் இணைந்து செயற்பட வேண்டும். ஆனால் எமது நாட்டில் இவை மூன்றும் இணைந்து செயற்படும் தன்மை குறைவாக உள்ளது. அவ்வாறு செயற்பட்டாலும் தொடர்ச்சியாக செயற்படுவது என்பது சவாலான ஒரு விடயமாக இருக்கின்றது. ஆகவே இந்த விடயம் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

இறுதியாக சமூக மனவெழுச்சிக்கற்றல். மாணவர்களுக்கு தம்மைப்பற்றிய விழிப்புணர் வையும் தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தக்கூடிய வகையில் மாணவர்களுக்குரிய அத்தியாவசியத் திறன்களையும் தேர்ச்சிகளையும் வழங்கக் கூடிய-தாக இருத்தல் வேண்டும். சமூகத்திறன்கள், சமூ கஇடைவினை, மனவெழுச்சிச் சவால்கள் இவற்றுக்கான திறன்கள் மாணவர்களிடம் மேம்படுத்தத்தக்க போதனைகள் நடைபெற வேண்டும். சந்தைக்குச் செல்வது வங்கிச்

உண்மையான அனுபவங்களை மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும். அத்தோடு மனவடுக்கள் ஏற்படாதவாறு ஒவ்வொரு மாணவரும் அவரவரது பண்பாட்டுப் பின்னணியில் கற்பிக்கப்பட வேண்டும். இவை அனைத்தையும் உள்ளடக்கியதாக நாங்கள் கற்பிக்க வேண்டும். எல்லா ஆசிரியர்களுக்கும் பயிற்றுவிக்க வேண்டும்.

இவை தான் இன்றைய விசேட கல்வியில் சமகாலத்தில் முக்கியம் பெறும் விடயங்களாக விளங்குகின்றன. ஆகவே இவற்றில் உள்ள சவால்களை நீக்கி சரியான முறையில் நடைமுறைப்படுத்தி எதிர் காலத்தில் சிறந்ததொரு மாணவர் சமுதாயத்தை உருவாக்குவது ஆசிரியர்களாகிய எம் ஒவ்வொருவரினதும் கடமையாக இருக்கின்றது. சாதாரண பிள்ளைகள் விசேட தேவையுடைய பிள்ளைகள் அனைத்து பிள்ளைகளையும் நாம் வகுப்பறையில் சந்திக்கின்றோம் இனியும் சந்திக்க இருக்கின்றோம். அவர்களுக்கான கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்து சிறந்த மாணவர் சமுதாயத்தை உருவாக்குவோம்.



## கலாசாலைகளுக்கான விடுமுறை ஆரம்பம்

அரச ஆசிரியர் கலாசாலைகளுக்கான விடுமுறையானது 01.08.2025 தொடக்கம் 01.09.2025 வரை கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கான விடு முறையாக கணிக்கப்படுகிறது.

கலாசாலை அலுவலகம் வழமைபோன்று இயங்கும் என கலாசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார்.

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விசேட கல்வி கற்கைநெறியினருக்கான வருகைதரு விரிவுரையாளர் திருமதி இ.அஜந்தினி அவர்களுக்கு விசேட கற்கைநெறி ஆசிரிய மாணவர்கள் வழங்கிய கௌரவிப்பு 31.07.2025 அன்று கலாசாலையில் நடைபெற்றது



## கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர் கல்வியாளர் சேவை உத்தியோகத்தரான திருமதி சிவதர்சினி ஜெயராம் (சித்திர பாடம்) அவர்களை கலாசாலை சமூகத்தினர் வரவேற்றுக் கொள்கின்றனர்.



# கற்பித்தல் சாரா உத்தியோகத்தர் சந்தியா தேவராசாவின் மணிவிழா படங்கள்







# கலாசாலையில் சிறப்பாக இடம்பெற்ற மெய்வல்லுநர் போட்டிப் படங்கள்













# கலாசாலையில் சிறப்பாக இடம்பெற்ற மெய்வல்லுநர் போட்டிப் படங்கள்











# கலாசாலையில் சிறப்பாக இடம்பெற்ற மெய்வல்லுநர் போட்டிப் படங்கள்

